201

உ

சரஸ்வதி துணை.

# வத்ஸலா கல்யாணக்கும்மி

10 JUL 1923

894.811
2427

இஃது

கோபிசெட்டிபாளையம்,

**விவேகாநந்த சங்கத்தாரால்**

நடத்தப்படும்

**சாரதா ஹிந்து பெண்பாடசாலையின்**

ஹெட்மாஸ்டராகிய,

**G. S. வெங்கிடசுப்பய்யரால்**

இயற்றப்பட்டு

கோபிசெட்டிபாளையம்,

...ச்சுயந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்டது.

**1923.** [ அணா 0-1-0

சாப்பிகள்—1000.

224789

உ

ஸரஸ்வதி துணை.

## ஸரஸ்வதி பிரார்த்தனை.

யா குந்தேந்து துஷாரஹார தவளா
யா சுப்ர வஸ்த்ராவ்ருதா
யா வீணா வரதண்ட மண்டித்தகரா
யா ச்வேத பத்மாஸனா.
யா ப்ரம்மாச்சுத சங்கர ப்ரப்ருதிபிஹி
தேவைஸ்ஸதா பூஜிதா ஸாமாப்பாது
ஸரஸ்வதீ பகவதீ நிஸ்சேஷ ஜாட்யாபஹா.

---

## சிங்காரமாகிய ஸ்ரீ ரங்கநகர் என்ற மெட்டு.

1. துய்மை மிகுந்துள்ள  துவாரகநகரை
துன்பமில்லாம  லரசாண்ட
பலராம கிருஷ்ணர்கள்  பந்துமித்ருருடன்
பாலைவத்ஸலையுட  னிருந்தார்.

2. பாண்டவரைவரில்  பற்குணனென்பவன்
பாமைசுமத்ரையைத்  தான்மணந்து
பாலனை அபிமன்யுவை  யடைந்து
பரமானந்தத்துட  னிருந்தார்

3. பாலசெந்தரன் போலெ  பாலர்க்ள்வளர்ந்து
பத்தேழுவயதை  யடைந்தொருநாள்
பலராமகிருஷ்ண சுமத்ரை  பார்த்திருக்க
பாலர் புஷ்பம்  சூட்டிப்பாடுவதை.

4. பார்த்திதை பலராமர்  பூர்ணானந்தங்கொண்டு
பர்த்தாவாவானிவன்  வத்ஸலைக்கு
பகர்ந்ததைப்புரந்தரனும்  ஊர்ஜித்துப்பேசியெ
பாமைசுப[illegible]ரக  கிதையுரைத்தார்.

224789

## தொண்டிச்சிந்து.

1. பாண்டவரை யருமெ இந்தாப் பிரஸ்தந்தனே யேயாச சாளுவதை
2. பாவிதுர்யோதனனும் மனம் தாளாமல் செய்தான்சதியா
[லோசனே.
3. சகுனியைக் கூட்டிவந்து அவரிடம் செப்பினன் தன்
[கருத்தை அக்கரையாய்.
4. மாயச்சூதாட்டத்தினல் அவர்களை மயங்கச் செய்வேனாரொரு
[வனுமே
5. சூதாடவரவழைத்து சகுனி சுற்றத்தாருட னவர் சொத்தை
[யெல்லாப.
6. பறித்துப் பாமராக்கியெ அவர் பாரியான துரோபதையை
[பங்கப்படுத்தி.
7. பன்னிரண்டோராண்டுவரை வன வாசமுமக்யாதவாசம்
[செய்து வந்தால்.
8. பாகத்தைக் கொடுப்பதாக அவர் பகர்ந்தபடியெ வனவாசம
சென்றார்.
9. பாமை சுமத்ரையை பாலருடன் பாட்டன் விதுரரிடம்
[விட்டேகினர்.] (பாண்டவா)

## கேளும் ஸுஜனரான பரிட்சித்து மகாராஜனே மெட்டு

பாண்டவர் வனவாசம தீர்ந்து பாகமதைக்கேட்பாராகில்
பாரதப்போர் நடக்குமிந்தப் பார்தனிலெ ராஜர்களுக்கும்
2. பாண்டவரைக் காக்கப் பரந்தாமனொருவன் இருக்கின்றாரே
பலராமரைச் சேரவண்ணம் பார்க்கவேணுமிக்கணமெ
3. வத்ஸலையை லெக்கணனுக்கு நிச்சியம் செய்திடுவோமானல்
கிருஷ்ணனெண்ணம பலிக்காமற்போய் கெலிப்பெநமக்
[குறிமையாகும்.
4. என்றுசொல்லி துவாரகைபோய் இசைந்த பலராமரிடம்
எழுதிவந்த பத்ரிகையை இறைவனிடம் இசைந்துகொடுத்தார்
5. மணவோலைதன்னைபல மன்னர்களுக்குத் தானுமனுப்பி
அஸ்தினபுரத்திலுள்ள அனைவர்களுக்கும் அனுப்பிவைத்தார்.

## ராஜா வருவாரென்று என்ற மெட்டு.

1. கண்டாள் சுபத்திரையும் கல்யாண ஓலைதன்னை
கலங்கியெ துன்பமுற்றாள் அண்ணன்செய்த காரியங்
[களை நினைத்து

2. பதியை விட்டுப்பிரிந்து பார்முழுதும் தோற்றதினால்
பகர்ந்ததை மறந்தடா ராமாபக்கம் பாலகிருஷ்ணா
[சேர்ந்தாயோடா

3. பக்தவத்ஸலனென்றும் பாண்டவர் சகாயனென்றும்
பகர்வதும் பொய்யாச்சுதே பாலகிருஷ்ணா பகைவரேச
[இடமாச்சுதே

## மத்தகெஜம் போல்நடந்து என்ற மெட்டு.

1. மாதமுக வாட்டமதை மன்னனபிமன்யுவும் தான் கண்டு
மனக்கவலை கொள்வதற்கு மாதாவே யார் குற்றம் செய்தா
[ருனக்கு.

2. தேவர் மூவர் தானவர்கள் யாவரானாலும் சரியம்மா
செப்பிடுவாய் இந்தட்சணம் சேர்ப்பேன் எமபுரந்தனுக்கு
[நானே.

3. தேவர் மூவர் தானவர்கள் செய்தகுற்றம் யாதுமில்லை உந்தன்
பெரியமாமன் பேச்சுமாறி பேதையாக நினைத்தாரன்றோநம்மை

4. வத்ஸலையை உனக்களிக்க வாக்குத்தத்தம் செய்திருந்தாரப்போ
வஞ்சகர்கள் போதனையால் வாக்களித்தார் லெக்கணனுக்
[கிப்போ.

## இந்தப்படி சொன்னதொரு நந்தகோபன் என்றமெட்டு

1. இந்தப்படி சொன்னதொரு நிந்தை வார்த்தை தனைக்கேட்டு
சிந்தைதனிற் கோபங்கொண்டு சென்றொருதேர் அந்தமுடன்
[தான் கொணர்ந்தான்.

2. சிந்தைதனிற் கோபம்வேண்டாம் சீக்கிரமாய்த் தேர்விடம்மா
அந்தபலராமன் பெண்ணை உந்தனுக்குச் சொந்தமாகச்
[செய்திடுவேன்.

3. கூறியவென்கணைகளால் குறுக்காக வழிசெய்வேன்
குறிப்பிட்ட நாளுக்கு முன் நாம்பளும் குறுகுவோம்
[துவாரகையை.

4. இசைந்து தேரைவிடுக்க இடும்பிவனமடைந்து
பகைத்துமே வந்ததொரு சேனைகளை பங்கம்செய்து
[அனுப்பிவிட்டார்.

## வந்ததொரு மாதவனை பாமை என்ற மெட்டு.

1. வந்ததொரு சேனைகளை கடோத்கஜன் கண்டுமிகக்கோபம்
[கொண்டு
இந்தத்துண்டரீகம் செய்தவனை நானுமிப்போ கண்டதுண்டம்
[செய்திடுவேன்.

224789

2. என்றுசொல்லி கெடோத்கஜனும் எழுந்து இரும்புலக்கை
[கையிற்கொண்டு
அண்டர்களும் கண்டுமனம் நடுங்க அபிமன்னனை வந்த
[டைந்தான்.

3. தேவாஸ்த்ரயுத்த[illegible] இருவரும் தேவதாஸ்திரங்களை
[விடுத்து
செய்தபோரில் ஜெயமடைய கெடோத்கஜன் சேயிருளில
[தான் மறைந்தான்.

4. தேவேந்திரன் தான்கொடுத்த அந்த திவ்யசக்தி தான்விடுத்து
தேவருள்ளம் தான்குழையா பிமன்னனை தோத்தட்டினில்
[காயச்செய்தான்.

## கண்டாள் சுபத்திரையும் என்ற மெட்டு.

1. என்ன செய்குவெனட எந்தனிட கண்மணியெ
என்னை தனியாய்விட்டு இவ்விடம் என்னுறக்கமுறங்குராயோ.

2. பதியைவிட்டுப்பிரிந்து பாலகா உன்னைப்பிரிந்தால
பாரிலுள்ளோர்களெல்லாம் எந்தனைப்பாவியென்று ஏசிடாரோ.

3. அப்பா கோபாலகிருஷ்ண அச்சுதானந்த முகுந்த
அடியேன் படுந்துயர்க்கு நீயுமெ ஆற்றுதல்செய்குவாயிப்போ.

4. ஆகாயவாணி சொல்ல அம்பிகையைத் தானினைத்து
அன்புடன் பூஜை செய்தாள் அக்கணம் ஆயன் ஸகோதரியும்.

5. அம்ருத கடமேந்தி அம்பிகையும் முன்தோன்றி
அம்ருதம் தோய்ந்த கையினால் நீயுமெ அபிமன்னனைத்
[தடவுவாயெ.

6. அம்ருதஸ்பரிசம் பெற்று அக்கணமே பாலகனும்
ஆர்த்துயிர் பெற்றெழுந்து அக்கணம் ஆரவாரம் செய்
[தானப்பொ.

7. மற்றுமொரு கரத்தை மாதினைத் தடவச்சொல்லி
மாயமாய்த்தான் மறைந்தாள் அப்பொழுது மங்களகௌரியுமெ

## ராமமஹி ப்ரணிதபால என்ற மெட்டு.

1. கூக்குரலைக் கேட்டுமந்த குரூரகெடோத் கஜனுமப்போ
கூறும் தாய்சொற் கேளாமல் கொடியபோர்க்களம் வந்து
[சேர்ந்தான்.

2. வந்த அசுரனைக்கண்ட வள்ளலபிமன்யுவப்போ
வஜ்ரமேவி கெடோத்கஜனை வானுலகில் போகச்செய்தான்

3. மைந்தன் விழுந்த சேதிகேட்டு வாய்விட்டலறி வயிற்றி
[லறைந்து
வள்ளல் பீமார்ஜுனனென்று வந்துசேர்ந்தாளமர்க்களமே

4. கள்வன் பேரைச்சொன்னவனை கண்டறிந்தாள் மதினியென்று
கவலைப்பட வேண்டா மூந்தன் கண்மணியை எழுப்புகிறேன்.

5. அம்பிகையைத்தானினைத்து அம்ருதம்தோய்த்த கரத்தில்தடவ
ஆர்த்த உயிர பெற்றெழுந்து அபிமன்னனைத் தேடலானான்.

6. அண்ணன் தம்பி மார்கள்நீங்கள் அமர்செய்வது நியாய
[முண்டோ
ஆத்திரமும் வேண்டாமென்று அரண்மனைக்கு அழைத்துச்
[சென்றார்

7. தம்பியென்று அறிந்தவுடன் தழுவி அவனை முகதமிட்டு
தனியாய்வந்த விவரமதை தம்பியிடம் கேட்டறிந்து

. தாய்மாமன் ஜாங்கிலியால் தங்கள் பரிவாரமுடன்
ரேவதிபர்வமடைந்து தேவகியின் புத்ரனான

9. கிருஷ்ணன் சகாயமில்லாமல் கெலிப்புநமக்கேற்படாது
என்றியம்பி கிருஷ்ணனிடம் எவரும்காண வணங்கி நின்றான்

## சொல்லவேணும் சுகமுனியே என்ற மெட்டு.

சொல்லவேணும் யோசனைதான் சுகுமாரா கோபாலகிருஷ்ணா.

1. சுந்தரியாள் சுபத்ரையும் சேர்ந்த மகனுடன் கூடி
உந்தனிட அருள்பெற அந்தபலை மீறிவிதோ.
2. வத்ஸலையை மாலையிட வரம் தந்தருளவேண்டும்
அந்தரெங்கமாய் நான் செய்யும் அபசாரத்தை மன்னித்து.
3. மாயனிட அருள்பெற்று மாமனிடம வந்து சேர்ந்து
மாய்கையினால் அங்கேயுள்ள மங்களப் பொருளைக்கொண்டு.
4. மணப்பந்தற் முதல்கொண்டு மாட்சியாயலங்கரித்து
மற்றதற்குப் பதிலாக மாயராட்சதர்கள நின்றார்.
5. வஸ்திராபரணங்களாக வந்தவர்கள் யாவருக்கும்
புதியவஸ்திரம் கொடுத்து பழயதை வாங்கிக்கொண்டான்.

## மத்தகஜம் போல்நடந்து என்றமெட்டு.

1. கல்யாணப்பெண்போலெ கெடோத்கஜனும் உருவுகொண்டு
எல்லாப் பெண்களுக்கும் இசைந்தபடி நடந்துகொண்டு.
2. காண்டீபன் மைந்தனிட கல்யாணத்தை நடத்தும்படி
கண்ணபிரான் ருக்மணியை கடுகியே அனுப்பிவிட்டான்.

3. கண்ணபிரான் தேவர்களையும் கானகத்தின் ரிஷிகளையும்
கருத்திலெண்ணி வரவழைத்து கல்யாணச் சடங்குசெய்து.
4. மாங்கல்யம் தரிப்பித்து மனமுவந்து விடைபெற்று
மாயவனும் துவாரகைவந்து மாயப்செய்துபடுத்துக்கொண்டார்

---

## கொற்றங்கலந்த வில்லம்பொடு என்ற மெட்டு.

1. மாயகெடோத்கஜனை மங்கையர்கூடிமங்களஸ்நானம்செய்வித்து
மலர்களைச்சூட்டி மணிகளையிட்டு மணப்பந்தற்கழைத்துமெ
[செல்கையிலே.
2. வத்ஸலைதனக்கு வயிறுபசிக்குதென்று வணக்கமாய் தாய்க்
[கிதையறிவிக்க
வருந்தியெ மடைப்பள்ளி தனக்கழைத்துச்சென்று பொருந்
[தியவமுதிடப்பகர்ந்தனளே.
3. சூழ்ந்திருந்த சுயம்பாகிகளையெல்லாம் சுருக்காக வெளி
[போகத்துரத்தினன்
சுயரூபம்கொண்டு சுழற்றிவாயில்போட்டான் சுயம்பாகிகள்
[செய்ததையெல்லாம்.
4. மற்றுமந்த விடத்தில் மணியொன்றில்லாமல் மாய கெடோத்
[கஜன் தான்தின்று
மணமகளைப்போல மணவரை வந்து மௌனமாகத்தானுட்
[கார்ந்தான்.
5. வேதியர்வேத மந்தரங்களோதி விதிப்படி வேள்விகள்
[நடத்தினர்
வேஷவத்ஸலைக்கு மாங்கல்யம் தரிக்க வேந்தலெக்கனிடம்
[தான் கொடுத்தார்.
6. மாங்கல்யம் தரிக்கும் மணமகன் தனக்கு மாயராட்சதன்
[போல்காண
மனமிகநடுங்கி மணவரைதனில் வீழ்ந்து மாண்டவன்தனைப்
[போல் மூர்ச்சித்தான்.

7. உறத்தசத்தமிட உற்றராட்சதரெல்லாம் உருமாறி ஒன்ருக [நின்ருர்கள்.
உடுத்தின ஆடைமுதல் ஒன்றுமில்லாமல் ஓடினூர்பலதிசை [பின்னெருவர்.

8. பஞ்சாலிசாபம் பலித்தது என்று பகர்ந்தனர் ஜெனங்கள் [பலர்கூடி
பாலகிருஷ்ணனை பகாமுடிசெய்த பாவமிதுவெனப் பகர்ந் [தனர்கள்]

---

## முத்திநெறியறியாத என்ற மெட்டு.

1. வத்ஸலையைக் காணுமல் வருந்திமிக பலராமர்
வள்ளல் கிருஷ்ணன் அரண்மனைக்கு வந்துசேர்ந்தாரக்கணமே.

2. உந்தனைநான் மதியாததால் உலகோரேச ஆளானேன்
கண்ணனே என் கண்மணியை காட்டியிடுவாயிக்கணமே.

3. பாவியிட் போதனையால் பகர்ந்ததெல்லாம் நான் மறந்து
பண்ணின தோஷ சாரமெல்லாம் பாராட்டாமலே [எனையாள்வாய்.

4. தேகமதின் பாதனையால் தெருதன்னில் போகாமல்லிருந்தேன்
தேவரீரின் வாக்குப்படி ரேவதியின் பர்வமதில்

5. வத்ஸலைக்கு மபிமன்யுவுக்கும் விவாகமது நடந்ததாக
வந்த செய்தி அறிவிக்க வருமுன்னம் நீர் வந்தீரிங்கே

6. என்று சொல்ல இருவர்களும் ஏற்ற பரிவாரமுடன்
ரேவதி பர்வம் வந்தடைந்து தேவி சுமத்ரையைத்தான்தேற்றி

7. மணமகனையும் மணமகளையும் மாட்சியுடன் [அழைத்துச்சென்று
மற்ற கல்யாணச்சடங்குகளை மகிழ்வுடன் நடத்தினர்கள்

8. சாரத கோபிப்பெண்பாடசாலையும் சாற்றுமித்ததை [பாடியாடுகின்ற
பாரத மாணவச்சிறுமிகளும் ஸ்ரீமன் கிருபையால் வாழ்வாரே.

224781